
உ

ஓம்சரஹணபவ

ஸ்ரீ திருத்தணிகை வேல்முருகன்

# காவடி பாட்டு



ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்)

65, திருப்பள்ளி தெரு, மதராஸ்-1

விலை 1952

உ

ஓம்சரஹணபவ

வேலுமயிலும் துணை

திருத்தணிகை முருகன்

# காவடி பாட்டு

| | | |
|---|---|---|
| அரகரா | முருகையா | என்றசப்தம் |
| அனுதினமும் | முருகையா | நான்மறவேன் |
| சிவசிவா | முருகையா | என்றசப்தம் |
| சிந்தைதனில் | முருகையா | நான்மறவேன் |
| ஓதிவைத்த | முருகையா | என்குருவே |
| ஒருநாளும் | முருகையா | நான்மறவேன் |
| பாடிவைத்த | முருகையா | என்குருவே |
| பலநாளும் | முருகையா | நான்மறவேன் |
| ஆற்காடு | முருகையா | நெடும்பாதையிலே |
| ஆறுலக்ஷம் | முருகையா | காவடிகள் |
| வேலூரு | முருகையா | நெடும்பாதையிலே |
| வேணலக்ஷம் | முருகையா | காவடிகள் |
| திருச்செந்தூர் | முருகையா | நெடும்பாதையிலே |
| தினதினமும் | முருகையா | காவடிகள் |
| காவடியை | முருகையா | தோளில்வைத்து |
| சாவடிக்கு | முருகையா | வாரதெப்போ |
| தூக்கிவைக்கும் | முருகையா | உன்கால்களுக்கு |
| துத்தியப்பூ | முருகையா | ஜல்லடமாம் |
| எடுத்துவைக்கும | முருகையா | உன்கால்களுக்கு |
| எறுக்கம்பூ | முருகையா | ஜல்லடமாம் |
| மண்டியிடும் | முருகையா | உன்கால்களுக்கு |
| மாதளம்பூ | முருகையா | ஜல்லடமாம் |
| முள்ளாலே | முருகையா | மெறுவடியாம |

| | | |
|---|---|---|
| மேல்குமனு | முருகையா | ரத்தினமாம் |
| தங்கநல்ல | முருகையா | மெறுவடியாம் |
| தனிகுமனு | முருகையா | ரத்தினமாம் |
| எங்கேகண்டு | முருகையா | உனைதேடுவண்டா |
| இனிவருவேன் | முருகையா | உன்சன்னதிக்கே |
| நாகமலை | முருகையா | தோகைமலை |
| நாலுதிக்கும் | முருகையா | தணிகைமலை |
| தணிகைமலை | முருகையா | நீவிட்டல்லவோ |
| சமரமுடன் | முருகையா | நீவாரதெப்போ |
| வேலெடுத்து | முருகையா | கெஜ்ஜைகட்டி |
| விதவிதமாய் | முருகையா | மயிலேறி |
| கானமயில் | முருகையா | ஜீனிவைத்து |
| கந்தர்வரும் | முருகையா | வேளைஐயா |
| காலாட | முருகையா | வேல்அசைய |
| கானமயில் | முருகையா | கூத்தாட |
| அறுபதுமார் | முருகையா | காவிகஜ்ஜை |
| ஆறுசுற்றாய் | முருகையா | சுத்திவிட்டார் |
| எழுபதுமார் | முருகையா | நீர்காவிகஜ்ஜை |
| ஏழுசுற்றாய் | முருகையா | சுற்றிவிட்டார் |
| எண்பதுமார் | முருகையா | காவிகஜ்ஜை |
| எட்டுசுற்றாய் | முருகையா | சுற்றிவிட்டார் |
| கஜ்ஜைநல்ல | முருகையா | வறிந்துகட்டி |
| காவிகஜ்ஜை | முருகையா | சுங்குவிட்டார் |
| முன்னேவிடும் | முருகையா | சுங்குலேதான் |
| மோககன்னி | முருகையா | அட்சரமாம் |
| பின்னேவிடும் | முருகையா | சுங்குலேதான் |
| பிரம்மனும் | முருகையா | தங்கிடுவான் |
| கண்டிஐயா | முருகையா | உன்னாடு |
| கதிர்காமம் | முருகையா | உன்தேசம் |

| | | |
|---|---|---|
| பழனிஐயா | முருகையா | உன்னாடு |
| பாரமலை | முருகையா | உன்தேசம் |
| கொஞ்சமையா | முருகையா | உன்வயது |
| குழந்தையான | முருகையா | தேசிகனே |
| காவிஐயா | முருகையா | உன்சோமன் |
| கடுக்கனையா | முருகையா | செம்புநிறம் |
| பூணாலு | முருகையா | பொன்னாலே |
| புண்ணியனே | முருகையா | மார்பிறள |
| மல்லிகைப்பூ | முருகையா | வள்ளியம்மை |
| மருக்கொழுந்து | முருகையா | தெய்வயானை |
| வள்ளிநல்ல | முருகையா | வலதுபுறம் |
| தெய்வயானை | முருகையா | இடதுபுறம் |
| பார்த்தாலும் | முருகையா | பண்டாரந்தான் |
| பழிப்பவர்க்கு | முருகையா | படிநெருப்பு |
| சாம்பிராணி | முருகையா | நீவாசனைக்கு |
| தணிகைமலை | முருகையா | போயமர்ந்தாய் |
| புனுகுசட்டம் | முருகையா | வாசனைக்கு |
| போயமர்ந்தாய் | முருகையா | பழனிமலை |
| ஊசிநல்ல | முருகையா | பழனிமலை |
| உத்ராக்ஷம் | முருகையா | காய்க்குமலை |
| காறைநல்ல | முருகையா | படர்ந்தமலை |
| கற்பூரம் | முருகையா | காய்க்குமலை |
| வாழைநல்ல | முருகையா | படர்ந்தமலை |
| வள்ளியம்மை | முருகையா | வாழும்மலை |
| தேனுநல்ல | முருகையா | படர்ந்தமலை |
| தெய்வயானை | முருகையா | வாழும்மலை |
| கோரைநல்ல | முருகையா | படர்ந்தமலை |
| கோதையர்கள் | முருகையா | வாழும்மலை |
| சீனிநல்ல | முருகையா | படர்ந்தமலை |
| சித்தர்கள் | முருகையா | வாழும்மலை |

| | | |
|---|---|---|
| பழனிமலை | முருகையா | விட்டிறங்கி |
| பாவவினை | முருகையா | தீருமையா |
| அஞ்சிசடை | முருகையா | கொஞ்சிவர |
| அழகுஜடை | முருகையா | மார்பிறள |
| ஐந்துஐயா | முருகையா | உன்வயது |
| அறியாத | முருகையா | பிராயமையா |
| கொஞ்சமையா | முருகையா | உன்வயது |
| குழந்தைவடி | முருகையா | வேலவனே |
| ஆறுவண்டி | முருகையா | நூறுலட்சம் |
| அழகுரதம் | முருகையா | பழனிமலை |
| ஏறுத | முருகையா | மலைதனிலே |
| எருதுரெண்டு | முருகையா | தத்தளிக்க |
| எட்டுதிக்கும் | முருகையா | வாணர்படை |
| இடும்பர்வந்து | முருகையா | படைசூழ |
| நெற்றியில் | முருகையா | நீர்இருக்க |
| நினைவுதப்பி | முருகையா | போனதென்ன |
| உச்சியிலே | முருகையா | ஜடையிருக்க |
| உள்ளங்கையில் | முருகையா | வேல்இருக்க |
| காடுவெட்டி | முருகையா | சுட்டசாம்பல் |
| கர்த்தருட | முருகையா | வெண்ணீராம் |
| வெண்ணீறு | முருகையா | பட்டவுடன் |
| வினைகளெல்லாம் | முருகையா | பற்றருப்பாய் |
| பஞ்சாக்ஷரம் | முருகையா | பட்டவுடன் |
| பாவவினை | முருகையா | பற்றருப்பாய் |
| இளநீறு | முருகையா | காவடிகள் |
| இறங்குதையா | முருகையா | உன்சன்னதியில் |
| பன்னீறு | முருகையா | காவடிகள் |
| பாலர்நாங்கள் | முருகையா | கொண்டுவந்தோம் |
| தயிருநல்ல | முருகையா | காவடிகள் |
| தணிகைமலை | முருகையா | தேடுதங்கே |

பஞ்சாமிர்த முருகையா காவடிகள்
பாலகனே முருகையா தேடுதங்கே
சர்ககரை முருகையா காவடிகள்
சண்முகத்தே முருகையா தேடுதங்கே
மாம்பழ முருகையா காவடிகள்
மன்னவனே முருகையா தேடுதங்கே
வாழைநல்ல முருகையா காவடிகள்
வடிவழகா முருகையா தேடுதங்கே
கொய்யாநல்ல முருகையா காவடிகள்
குருபரனே முருகையா தேடுதங்கே
மாதுளம்பூ முருகையா காவடிகள்
மகிழ்ச்சியாக முருகையா வருகுதுபார்
அபிஷேக முருகையா காவடிகள்
ஆடுதுபார் முருகையா உன்சந்நிதியில்
எறுக்கம்பூ முருகையா மாலைகட்டி
எடுத்துவரோம் முருகையா பாலர்நாங்கள்
நீராடி முருகையா நீர்குளித்து
நீலவர்ண முருகையா பட்டுடுத்தி
பட்டுநல்ல முருகையா பளபளன்ன
பாடவட்டம் முருகையா ஜோதிமின்ன
முத்துநல்ல முருகையா மொளமொளன
மோதிரங்கள் முருகையா ஜோதிமின்ன
சோதனை முருகையா காரணையா
சுப்ரமண்ய முருகையா வேலவனே
குண்டுமல்லி முருகையா காவடிகள்
குருபரனே முருகையா தேடுதங்கே
குங்குமப்பூ முருகையா பன்னீராம்
அத்தர்களும் முருகையா வெற்றிவேறும்
பவழமல்லி முருகையா மாலைகட்டி

| | | |
|---|---|---|
| பட்சமுடன் | முருகையா | கொண்டுவாரோம் |
| சாமந்திப்பூ | முருகையா | மாலைகட்டி |
| சண்முகனே | முருகையா | கொண்டுவாரோம் |
| மலையாள | முருகையா | தேசமெல்லாம் |
| விளையாடி | முருகையா | நீவந்தவரும் |
| மொண்டிநல்ல | முருகையா | முடவரெல்லாம் |
| முட்டிபோட்டு | முருகையா | ஏறுமலை |
| தள்ளாத | முருகையா | கிழவரெல்லாம் |
| தடிஊணி | முருகையா | ஏறுமலை |
| அர்த்தராத்திரி | முருகையா | வேளையிலே |
| அலைகிறோம் | முருகையா | பாலர்நாங்கள் |
| நார்த்தம்பழம் | முருகையா | காவடிகள் |
| தற்பரனே | முருகையா | தேடுதங்கே |
| ஏலக்கா | முருகையா | காவடிகள் |
| எடுத்துவரோம் | முருகையா | பாலர்நாங்கள் |
| ஆறுதப்பு | முருகையா | நூறுபிழை |
| அடியார்கள் | முருகையா | செய்ததெல்லாம் |
| கோடிதப்பு | முருகையா | நூறுபிழை |
| குழந்தைநாங்கள் | முருகையா | செய்ததெல்லாம் |
| ஆணுடமை | முருகையா | பெண்ணுடமை |
| அனைவரும் | முருகையா | உன்னுடைம |
| கல்லைய்யா | முருகையா | உன்மனது |
| கரையலையோ | முருகையா | உன்னுள்ளம் |
| ஆறையா | முருகையா | எனக்குத்துணை |
| ஆதரிப்பார் | முருகையா | யாருமில்லை |
| ஆண்டவனே | முருகையா | நீகோர்க்கவேணும் |
| அநுதினமும் | முருகையா | நீஆதரிப்பாய் |

சம்பூரணம்.

ரத்னம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.

# அறிவிப்பு

இதனல் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் எங்களிடம் சில்லரை புத்தகங்களும், அம்மானை தினுசுகளும் விலே சரசமாய் கிடைக்கும்.

தமிழ், இந்தி, தெலுங்கு, இங்கிலீஷ், சமஸ்கிருதம், மலேயாளம், கன்னடம் முதலிய பாஷைகளில் அச்சு வேலேகள் செய்து தரப்படும்.

தமிழ், இங்கிலீஷ், போஸ்டர் வேலே களும் செய்து தரப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிருேம்.

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்)
65, திருப்பள்ளி தெரு, சென்னை-1.